# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 10 செவ்வாய்க்கிழமை 25.08.2025 கதிர் 297



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## அநுர அரசின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியோம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



கொழும்பு, ஓக. 26

அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் மூலம் அநுர அரசு எதிர்க்கட்சியை அழிக்க முயற்சிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இன்று செவ்வாய்க்கிழமை சந்தித்து நலம் விசாரித்த பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் மூலம் எதிர்க்கட்சியை அழிக்க ஏராளமான திட்டங்கள் 7

# ரணில் பிணையில் விடுவிப்பு!



**கொழும்பு, ஓக. 26**
**முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவைப் பிணையில் செல்ல அனுமதித்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.**

அதன்படி, சந்தேகநபரை தலா ரூ. 5 மில்லியன் பெறுமதியான 3 சரீரப்பிணைகளில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களைக் கருத்தில் கொண்டு கொழும்பு கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுர இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளைப் பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


## “அநுர கோ ஹோம்”



கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு இன்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி 7

## போராட்டக்காரர்களின் தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம்




கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக எதிர்க்கட்சியினர் மற்றும் ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றப் பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 7

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி நான்கு தொழிலாளர்கள் பாதிப்பு



மஸ்கெலியா, ஓக. 26

மஸ்கெலியாவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா, 7

## தியாகி பொன். சிவகுமாரனின் 75ஆவது பிறந்தநாள் தின நிகழ்வு



யாழ்ப்பாணம், ஓக. 26

தியாகி பொன். சிவகுமாரனின் 75 ஆவது பிறந்தநாள் தின நிகழ்வு யாழ். உரும்பிராயில் உள்ள அன்னாரின் சிலையில் இன்று காலை நடைபெற்றது.

தியாகி பொன். சிவகுமார் நினைவேந்தல் குழு உறுப்பினர் எஸ்.செந்தூரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



# ஒரே நேரத்தில் 20 ஜோடிகளுக்குத் திருமணம்

கொழும்பு, ஓக .26

புத்தளத்தில் ஒரே நேரத்தில் 20 ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைத்த நிகழ்வு பதிவாகியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் மறைந்த ஸ்தாபகத் தலைவர் ஷேக் சயீத் பின் சுல்தான் அல் நஹ்யான் நினைவாக, குறித்த திருமண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் 20 ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் நிகழ்வு ஓய்வுபெற்ற நீதிபதி சலீம் மர்சூப் தலைமையில் புத்தளம், பாலாவி, நாகவில்லு வைட் திருமண மண்டபத்தில் நடைபெற்றிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வேண்டுகோளின் பேரில், ஓ.எச்.ஆர்.டி (முஉசுனு) அமைப்பு ஏற்பாடு செய்த இந்த நிகழ்வுக்கு, ஷேக் முஹம்மது பதா அலி அப்துல்லா அல் காஜா அனுசரணை வழங்கினார்.

இந்த நிகழ்வின் ஏற்பாட்டுச் செயலாளராக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ அமைப்பின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி செயற்பட்டார்.

நிகழ்வின் முக்கிய விருந்தினராக இலங்கைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நாசர் அல் அமரி, பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக பொலிஸ் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எம். இல்லியாஸ், வர்த்தகப் பிரமுகர்களான டி.எல்.எம். நவாஸ், ஜவ்பர் அப்துல் சத்தார், முஹம்மத் இக்பால் சத்தார், இப்திகார் சாதிக், அமீன் பைலா, நாடாளுமன்ற உறுப்பினர் முத்து வாப்பா, புத்தளம் நகர சபை முதல்வர், மற்றும் வைத்தியர் மரீனா தாஹா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

திருமணத் தம்பதிகளுக்கான உதவிகள் திருமணச் செலவுகளுடன் சேர்த்து, ஒவ்வொரு தம்பதியினருக்கும் 03 இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கொழும்பு மேமன் சங்க வர்த்தகப் பிரமுகர்கள், தொழிலதிபர் டி.எல்.எம். நவாஸ், மற்றும் ரிஷாத் பதியுதீனின் பாரியார் உட்படப் பலரும் தம்பதிகளுக்குப் பரிசுகளை வழங்கினர்.

கலாநிதி அஷ்ஷெய்க் எம்.எல்.எம். முபாரக் மதனியின் திருமணத் தம்பதிகளுக்கான மார்க்கச் சொற்பொழிவும் அல்ஹாபிழ் ரியாஸின் சிறப்புப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இந்த திருமண நிகழ்வில் 20 உலமாக்கள், திருமணப் பதிவாளர், தம்பதிகளின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உணவக உரிமையாளரை குறி வைத்து துப்பாக்கி சூடு

கொழும்பு, ஓக .26

மாத்தறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை வீதிப் பகுதியில் துப்பாக்கி சூடு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

உணவக உரிமையாளரை குறி வைத்து, காரில் வந்த ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பியோடியுள்ளார்.

குறித்த சம்பவம்நேற்று(25) இரவு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது யாருக்கும் எதுவித காயங்களும் ஏற்படவில்லை.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான உணவக உரிமையாளர், துப்பாக்கிதாரியுடன் மோதலில் ஈடுபட்ட நிலையில் சந்தேக நபர் தப்பியோடியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் நடைபெற்ற இடத்தில இருந்து கைத்துப்பாக்கி ஒன்று, நான்கு தோட்டாக்கள் மற்றும் வெற்று ரவைகள் கண்டெடுக்கப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தொடர்பிலோ, துப்பாக்கிச் சூடு நடாத்திய சந்தேகநபர் தொடர்பிலோ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

சம்பவம்தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக சீவலி அருக்கோட நியமனம்!

கொழும்பு, ஓக .26

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக சீவலி அருக்கோட நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 45வது பணிப்பாளர் நாயகமாக சீவலி அருக்கோட இன்று (26) முதல் நியமனம் பெற்றுள்ளார்.

சீவலி அருக்கோட இலங்கை சுங்கத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரகக்கல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# ஒழுக்கமான சாரதிகளை ஊக்கப்படுத்துமாறு சபாநாயகர் கோரிக்கை



கொழும்பு, ஓக .26

பொலிஸ்மா அதிபர் (சட்டத்தரணி) பிரியந்த வீரசூரிய அண்மையில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களைப் பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இதன்போது சபாநாயகர் பொலிஸமா அதிபருக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அரசியலமைப்புப் பேரவையின் ஒருமித்த தீர்மானத்திற்கு அமைய, முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இந்த நியமனம் இடம்பெற்றிருப்பதாக சபாநாயகர் இங்கு குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொலிஸ்மா அதிபர் (சட்டத்தரணி) பிரியந்த வீரசூரிய, எந்தவொரு அரசியல் செல்வாக்கும் இன்றி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும், அது தனது உத்தியோகபூர்வ கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்கு சாதகமான சூழலை உருவாக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. மிகவும் ஒழுக்கமான முறையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என சபாநாயகர் முன்பு விடுத்த கோரிக்கையை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக பொலிஸ்மா அதிபர் இங்கு தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி, சாரதிகளின் பயணம் தொடங்கும் இடத்திலிருந்து அவர்கள் முடிக்கும் இடம் வரை அவர்களின் வாகனம் செலுத்தும் முறைகள் குறித்த தொடர்ச்சியான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, ஒழுக்கமான முறையில் வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் அந்த இடத்திலேயே பாராட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு சாரதிகளை ஊக்குவிக்கும் திட்டத்தின் மூலம் ஒழுக்கம் நிறைந்த சாரதிகளை உருவாக்கி, வீதி விபத்துக்களைக் குறைத்து உயிர் இழப்புக்களைத் தடுக்க முடியும் என்றும், இத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சபாநாயகர் இங்கு நினைவுகூர்ந்தார். (ஐ)

# வரவு செலவுத் திட்டம் தொடர்பான பூர்வாங்கக் கலந்துரையாடல்



கொழும்பு, ஓக .26

2025 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த மீளாய்வு மற்றும் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பூர்வாங்க கலந்துரையாடல் நேற்று (25) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

நகர மற்றும் கிராமிய வீடமைப்பு நிர்மாணத் திட்டங்கள், நகர அபிவிருத்தித் திட்டங்கள், நகர திட்டமிடல் திட்டங்கள், கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்கள், நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் போன்ற துறைகள் குறித்து இங்கு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இந்தத் துறைகளுடன் தொடர்புடைய நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் செயல்படுத்தப்படும் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது.

குறிப்பாக, கடந்த கால பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்குவதிலும், தொடங்கப்பட்ட திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இந்த ஆண்டு தொடங்கப்பட்ட திட்டங்களை இந்த ஆண்டு குறிப்பிட்ட இலக்குகளை நோக்கி வழிநடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரசாங்கம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு முறையாக நிதி ஒதுக்கியிருந்தாலும், அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாகப் பயன்படுத்தப்படாவிட்டால் அது ஒரு பிரச்சினையே என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வீடுகள் மற்றும் கட்டிடங்களை நிர்மாணிப்பதிலும், நகர திட்டமிடலிலும் சம்பந்தப்பட்ட பகுதி மக்களின் கருத்துகள் மற்றும் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, முந்தைய அரசாங்கங்களால் தங்கள் சொந்த விருப்பப்படி மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்படாத மற்றும் குறைந்த பயன்பாடுள்ள அரசாங்க கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன என்று தெரவித்தார்.

கடந்த காலங்களில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட்ட 18 பாலம் நிர்மாணிக்கும் திட்டங்கள் பாதியிலேயே கைவிடப்பட்டுள்ளதாகவும், அந்தக் நிர்மாணப் பணிகள் காரணமாக தற்காலிகமாக பயன்படுத்தப்பட்ட வீதிகள் சதுப்பு நிலங்கள் போல மாறியுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. அந்தத் திட்டங்களுடன் தொடர்புடைய நிர்மாணங்களை பூர்த்தி செயவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

குறிப்பாக, சீன மற்றும் இந்திய கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து இங்கு ஆராயப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கில் மீள்குடியேற்றம் தொடர்பான வீட்டுத் திட்டங்களை இந்த ஆண்டு நிறைவு செய்ய முடியும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். (ஐ)

# டுபாய் பாதாள உலக குழுவால் திலீப பீரிஸுக்கு கொலை மிரட்டல்

கொழும்பு, ஓக .26

டுபாயில் மறைந்திருக்கும் திட்டமிட்ட குற்றவாளிகள் குழுவினால், மேலதிக மன்றாடியார் மற்றும் ஜனாதிபதி வழக்கறிஞர் திலீப பீரிஸின் உயிருக்கு ஆபத்து விளைவிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து அவரது பாதுகாப்புக்காக ஒரு சிறப்பு பொலிஸ் குழு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த கொலை சதி தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், இந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திலீப பீரிஸின் வீட்டையும் அவர் பயணிக்கும் போது பாதுகாப்பதற்காக இந்த சிறப்பு பொலிஸ் குழு நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



# கலகம் தடுக்கும் படைகள் குவிப்பு

கொழும்பில் நடைபெறவிருக்கும் போராட்டத்திற்கு பதிலளிக்கும் விதமாக, பொது ஒழுங்கைப் பராமரிக்கவும், எந்தவித இடையூறுகளையும் தடுக்கவும் நகரத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் (OIC) அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஏதேனும் வன்முறை ஏற்பட்டாலோ அல்லது சட்டத்தை மீறும் நபர்களுக்கு எதிராகவோ சட்ட நடவடிக்கை எடுக்க தெளிவான அறிவுறுத்தல்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள பகுதியில் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன,

கூடுதலாக, எந்தவொரு அமைதியின்மைக்கும் விரைவாக பதிலளிக்க கலகத் தடுப்புப் படைகள் மற்றும் கூடுதல் பொலிஸ் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ)

# பொது சுகாதார பரிசோதகர் மீது அச்சுறுத்தல்

கொழும்பு, ஓக .26

கடமையில் இருந்த பொதுச் சுகாதார பரிசோதகர் மீது வர்த்தகர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (26) காலை முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகரான இளைய தம்பி நகுலேஸ்வரன் என்பவர் மீது வர்த்தகர் ஒருவரினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை(23)அன்று சந்தேக நபரான வர்த்தகருக்கு சொந்தமான வர்த்தக நிலையத்தில் பழுதடைந்த பழங்கள் மற்றும் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டு அவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த வர்த்தக நிலையத்திற்கு முன்னால் செவ்வாய்க்கிழமை (26) காலை மேற்படி பொது சுகாதார பரிசோதகர் சென்று கொண்டிருந்த நிலையில் குறித்த பொதுச் சுகாதார பரிசோதகரை அச்சுறுத்தியதுடன் தனது சீருடைகளை களைவதாகவும் ஒரு வாரத்திற்குள் வேலையில் இருந்து இடை நிறுத்துவதாகவும் அச்சுறுத்தியுள்ளதாக சுகாதார பரிசோதகர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நாடு முழுவதும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் என்ஆர்ஐ கோட்டாவில் பெரும் முறைகேடுகள்





நாடு முழுவதும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் என்ஆர்ஐ கோட்டாவில் பெரும் முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத் துறை விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்தியாவில் உள்ள அரசு மருத்துவ கல்லூரிகள் மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகளில் வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கு (என்ஆர்ஐ) குறிப்பிட்ட சதவீதம் இடம் ஒதுக்கப்படுகிறது. இந்நிலையில், தனியார் கல்லூரிகளில் போலி ஆவணங்கள் மூலம் என்ஆர்ஐ ஒதுக்கீட்டின்கீழ் 18,000 அட்மிஷன் போடப்பட்டது அமலாக்கத் துறை விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

இந்தியாவில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்பிபிஎஸ் படிப்பில் சேரும் என்ஆர்ஐ மாணவர்கள் பலர் உண்மையில் வெளி நாட்டினர் இல்லை. சில தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஏஜென்டுகளுக்கு பணம் கொடுத்து போலி ஆவணங்கள் தயார் செய்துள்ளனர். உள்நாட்டு மாணவர்களை வெளிநாடு வாழ் இந்தியர்போல காட்ட ஏஜென்டுகளும் போலி ஆவணங்களை தயார் செய்து கொடுத்துள்ளனர்.

மேற்கு வங்கம், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் என்ஐஆர் ஒதுக்கீட்டில் முறைகேடாக மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளது அமலாக்கத்துறை விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியார்கல்லூரிகளில்அமலாக்கத்துறை நடத்திய சோதனையில் போலி என்ஆர்ஐ சான்றிதழ்கள் சிக்கியுள்ளன. இதுதொடர்பாக மேற்கு வங்கத்தில் உள்ள ஒரு தனியார் கல்லூரி வங்கியில் வைத்துள்ள வைப்பு தொகை ரூ.6.42 கோடியை முடக்கியுள்ளது. இதேபோல் முறைகேட்டில் ஈடுபட்ட சில தனியார் கல்லூரிகளின் ரூ.12.33 கோடியை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. (ஐ)

## தமிழ்நாட்டை போல பஞ்சாபிலும் காலை உணவு திட்டத்தை தொடங்க விரும்புகிறேன்: பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் உரை



பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அம்மாநில முதல்வர் பகவந்த் மான் தெரிவித்துள்ளார். நகரப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைக்கும் வகையில், இன்று சென்னை, மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் மாணவர்களுடன் உணவு அருந்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.அதேபோல் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சேர்ந்து மாணவர்களுக்கு உணவுகளை பரிமாறி அவர்களுடன் காலை உணவு உட்கொண்டார்.

இந்த விழாவில் பேசிய பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான்,"பஞ்சாப் மாநிலத்தின் ஒவ்வொரு இடத்திலும் தென் மாநில உணவுகள் நிறைந்திருக்கின்றன. அதேபோல் பஞ்சாப் மாநில உணவுகள் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களில் விற்கப்படுவது சிறப்பான விஷயம் தென்மாநில உணவுகள்தான் தேசிய உணவுகள்போல் எங்கு பார்த்தாலும் நிறைந்திருக்கின்றன. பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவது சிறப்பான திட்டம். காலை உணவு திட்டம் போல் ஒரு சிறந்த திட்டம் எதுவும் இல்லை. மாணவர்களின் உடல்நிலையை முன்னேற்ற காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்துவது நல்ல விஷயம். மாணவர்கள் வயிற்றுப் பசியோடு இருந்தால் கல்வியில் கவனம் செலுத்த முடியாது.

இத்திட்டம் மாணவர்களின் வயிற்றுப் பசியையும் போக்கி, அறிவுப் பசியையும் போக்குகிறது. காலை உணவு திட்டத்தால் பள்ளிகளில் வருகைப்பதிவு அதிகரித்துள்ளது. இந்த திட்டத்தால் பள்ளிகளில் இடைநிற்றல் குறைந்துள்ளது.

காலை உணவு திட்ட விரிவாக்க தொடக்க விழாவில் பங்கேற்றதை பெருமையாக கருதுகிறேன். தமிழ்நாட்டை போல பஞ்சாபிலும் காலை உணவு திட்டத்தை தொடங்க விரும்புகிறேன். 20 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவது மிகப்பெரிய சாதனை. காலை உணவுதிட்டத்தை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசை பாராட்டுகிறேன். ஆம் ஆத்மி கட்சி ஏழை மக்களுக்கான கட்சி. கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு பஞ்சாப் அரசும் முக்கியத்துவம் அளித்து வருகிறது."இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## இளைஞர்களின் எதிர்காலத்தை பற்றி மோடி அரசுக்கு கவலை இல்லை: ராகுல் காந்தி குற்றச்சாட்டு



பணியாளர் தேர்வாணையம்(எஸ்எஸ்சி) நடத்தும் தேர்வுகளில் நடைபெறும் முறைகேடுகளை கண்டித்தும் நியமனங்களில் வெளிப்படைத்தன்மை கோரியும் டெல்லி ராம்லீலா மைதானத்தில் நேற்று முன்தினம் தேர்வர்கள் போராட்டம் நடத்தினர். இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொண்டனர்.இந்த போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது டெல்லி போலீசார் தடியடி நடத்தினர். மேலும் 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எக்ஸ் தளத்தில் நேற்று பதிவிட்டுள்ளதாவது: நாட்டின் இளைஞர்களின் எதிர்காலத்தைத் திருடுவது மோடி அரசின் பழக்கமாகிவிட்டது. எஸ்எஸ்சி தேர்வுகளில் முறைகேடுகளை எதிர்த்துப் போராடிய மாணவர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான தடியடி மிகவும் கண்டிக்கத்தக்கது. கடந்த 11 ஆண்டுகளில், பாஜ இளைஞர்களின் ஆட்சேர்ப்புத் தேர்வுகளிலிருந்து வேலைகள் வரையிலான பயணத்தை வினாத்தாள் கசிவு மாபியாக்களிடம் ஒப்படைத்து, கல்வி முறையை அழித்துவிட்டது. நாட்டில் உள்ள இளைஞர்கள் இந்த அநீதியை பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளதாவது: இளைஞர்கள் வேலைவாய்ப்பு மற்றும் நீதிக்கான தங்கள் உரிமைகளை மட்டுமே கோரினர். அவர்களுக்கு என்ன கிடைத்தது? லத்திகள். மோடி அரசாங்கம் நாட்டின் இளைஞர்களைப் பற்றியோ அல்லது அவர்களின் எதிர்காலத்தைப் பற்றியோ கவலைப்படுவதில்லை என்பது தெளிவாகிறது. ஏன்? இந்த அரசாங்கம் மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வரவில்லை, மாறாக வாக்குகளைத் திருடி ஆட்சிக்கு வந்தது. இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார் .(ஐ)



## இரட்டை இலையை மீட்கும் வரை போராடுவோம்: ஓபிஎஸ் உறுதி

இரட்டை இலையை மீட்கும் வரை போராடுவோம் என அதிமுக முன்னாள் முதல்வர ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார். அதிமுக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், கோவை மாவட்டம் அன்னூர் அருகே நால் ரோட்டில் கட்சி நிர்வாகியின் திருமண விழாவில் பங்கேற்க நேற்று காலை வந்தார். அன்னூரில் கட்சி நிர்வாகிகளை சந்தித்த அவர் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். பின்னர், அவர் நிருபர்களிடம் கூறுகையில்,"இரட்டை இலையை மீட்கும் வரை சட்டபூர்வமான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவோம், போராடுவோம். சட்டப்பூர்வ நடவடிக்கைகள் தொடரும். உண்மை தொண்டர்களும், மக்களும் எங்கள் பக்கம்தான் உள்ளனர்" என்றார் .(ஐ)

# வானை அளப்போம்!



அவர் பெயர் சாலி ரைட். விண்வெளிக்குச் சென்ற முதல் அமெரிக்கப் பெண்மணியான இவருக்கு 1983ஆம் ஆண்டில் இந்த வாய்ப்பு கிடைத்தது. இதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யாவின் வாலண்டினா தெரஷ்கோவா விண்வெளிக்குச் சென்றுவிட்டார், விண்வெளிக்குச் சென்ற முதல் பெண் என்கிற புகழையும் பெற்றுவிட்டார். ஆனால், அமெரிக்காவில் பெண்களை விண்வெளிக்கு அனுப்புவதில் பெரிய அளவில் தயக்கம் நிலவியது. இத்தனைக்கும் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் விண்வெளிப் பந்தயம் உச்சகட்ட வேகத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த காலக்கட்டம் அது. ரஷ்யரான யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்ற பிறகு, இருபத்தி மூன்றே நாட்களில் எட் வைட் என்பவரை விண்வெளிக்கு அனுப்பியது அமெரிக்கா. இவ்வளவு போட்டி நிலவியபோதிலும் பெண்கள் என்று வரும்போது அமெரிக்கா யோசித்தது. தன் தரப்பிலிருந்து ஒரு பெண்ணை அனுப்ப 20 ஆண்டுகள் எடுத்துக்கொண்டது.

இதற்கு முதலாவது காரணம் அப்போது இருந்த கட்டுப்பாடுகள். அமெரிக்க விமானப்படையில் விமான ஓட்டிகளாக இருப்பவர்கள் மட்டுமே விண்வெளி வீரர்களாகப் பயணிக்க விண்ணப்பம் செய்ய முடியும். ஆனால், விமானப் படையிலோ பெண்களுக்கு அனுமதி இல்லை. ஆகவே பெண்களால் விண்ணப்பமே செய்ய முடியவில்லை. 1972ஆம் ஆண்டில்தான் இதற்கான சட்டங்கள் தளர்வாக்கப்பட்டன. பெண்களுக்கும் விண்ணப்பம் அனுப்ப வாய்ப்பு கிடைத்தது. இதில் ஓர் அபத்தமான சுவாரசியம் என்னவென்றால், பிற தகுதிகள் எல்லாம் இருந்தால், 'விமான ஓட்டியாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, நீங்கள் விண்வெளிக்குச் செல்லலாம்' என்று பல ஆண் விண்வெளி வீரர்களுக்கு அமெரிக்கா சலுகை வழங்கியிருந்தது! ஆனால், பெண்களுக்கு இந்தத் தளர்வு வழங்கப்படவில்லை.

அடுத்த காரணம் நாம் எளிதில் ஊகிக்கக்கூடியதுதான். பெண்களால் இதைச் செய்ய முடியாது என்கிற பொதுவான எண்ணம். 'விண்வெளிக்குப் பெண்கள் செல்வார்கள் என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை' என்று அப்போதைய ஒரு நாசா விஞ்ஞானி கருத்துத் தெரிவித்திருந்தார். 'பெண்களை விண்வெளிக்கு அனுப்புவது தேசிய அளவில் முக்கியத்துவம் கொண்ட செயல்பாடா என்ன?' என்று அலட்சியமாக ஓர் அதிகாரி கேட்டிருக்கிறார்.

ஒருவழியாகத் தடைகளையெல்லாம் மீறி 1983இல் சாலி ரைடுக்கு விண்வெளிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விண்வெளிப் பயணத்துக்கு முன்னால், நாசா குழுவினரும் ஊடகங்களும் சாலியை எப்படி நடத்தினார்கள் என்பதை அறிந்துகொண்டால் உங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கும்.


"விண்வெளியில் நீங்கள் இருக்கும்போது உங்களுக்கான அழகு சாதனப் பொருட்கள் கொண்ட ஒரு பெட்டியை உருவாக்கப் போகிறோம், அதில் என்னவெல்லாம் வைக்கலாம்? நீங்கள் உதவுங்கள்□"

"ஆறு நாட்கள் விண்வெளியில் இருக்கப் போகிறீர்கள், நூறு டேம்பான் (ஒருவகை மாதவிடாய் நாப்கின்) போதுமா?"

இவை இரண்டும் நாசா குழுவினர் அவரிடம் கேட்ட கேள்விகள். மாதவிடாய்ப் பொருளைப் பற்றித் தெரியவில்லை என்பதைக்கூடப் புரிந்துகொள்ள முடிகிறது. 'விண்வெளியில் இருக்கும்போது அழகு சாதனப் பொருள் தேவைப்படும்' என்கிற குழுவினரின் எண்ணமும், அதற்குப் பின்னால் இருக்கும் பெண்கள் பற்றிய புரிதலும் அலுப்பூட்டுகின்றன.

சாலி ரைட்

வழக்கமாக சோவியத் யூனியனைச் சேர்ந்த விண்வெளி வீரர்களை ஊழளஅழயெரவள என்றும் அமெரிக்க விண்வெளி வீரர்களை யுளவசழயெரவள என்றும் அழைப்பார்கள். பெண் விண்வெளி வீரர்களின் படத்தைப் போட்டு, அதற்குக் கீழே, 'புடயஅழயெரவள' என்று பத்திரிகைகள் எழுதின- 'கவர்ச்சிகரமான விண்வெளி வீரர்கள்' என்று இதைப் புரிந்துகொள்ளலாம். ஆண்கள் விண்ணுக்குச் செல்லும்போது வராத 'கவர்ச்சி' என்கிற சொல், பெண்களைப் பற்றிப் பேசும்போது உடனே தலைதூக்கிவிட்டது. பத்திரிகையாளர் சந்திப்புகளில் சாலி ரைட் எதிர்கொண்ட கேள்விகள் அப்போது நிலவிய பெண் வெறுப்பு மனநிலையைத் துல்லியமாக வெளிப்படுத்தின.



'பயணத்தில் ஏதாவது சரியாக நடக்கவில்லை என்றால் நீங்கள் அழுவீர்களா?'

'உங்களுடைய இனப்பெருக்க உறுப்புகளை விண்வெளிப் பயணம் பாதிக்குமா?'

'பயணத்துக்காக என்ன அழகுசாதனப் பொருட்களை எடுத்துச் செல்வீர்கள்?' -என்பது போன்ற கேள்விகள் வந்தன.

இந்தக் கேள்விகளை நினைத்துப் பார்க்கும்போது இன்னொரு புகழ்பெற்ற சம்பவம் நினைவுக்கு வருகிறது. அவெஞ்சர்ஸ் திரைப்படம் வெளிவருவதற்கு முன்பாகப் பல பத்திரிகையாளர் சந்திப்புகள் நிகழ்ந்தன. சூப்பர் ஹீரோக்களாக நடித்த ஆண் நடிகர்களிடம், 'எப்படிப்பட்ட உடற்பயிற்சிகள் செய்தீர்கள்? சண்டைப் பயிற்சிகள் பலமுறை நடந்தனவா? உங்களின் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொண்டீர்களா? எப்படிப்பட்ட காட்சிகளுக்கு டூப்நடிகர் தேவைப்பட்டார்?' என்பது போன்ற கேள்விகளைக் கேட்ட ஊடகங்கள், படத்தின் ஒரே பெண் சூப்பர் ஹீரோவான ஸ்கார்லட் ஜொஹான்சனிடம், 'உங்களின் சூப்பர்ஹீரோ உடைக்கு அடியில் உள்ளாடை அணிந்திருந்தீர்களா?' என்று கேட்டிருக்கிறார்கள். சர்ச்சைக்குரிய கேள்விகளைக் கேட்டு பார்வையாளர்களிடம் கவன ஈர்ப்பைப் பெறும் ஒரு செயற்பாடாக மட்டுமே இதை ஒதுக்கிவிட முடியாது. கவன ஈர்ப்புதான் தேவை என்று வைத்துக்கொண்டாலும் அதைச் செய்ய வேறு எவ்வளவோ கேள்விகள் இருக்கின்றன, உள்ளாடையைப் பற்றிக் கேட்டுத்தான் சர்ச்சையை உருவாக்க வேண்டும் என்பதில்லை. பெண்கள் பொதுவெளிக்கு வரும்போது எதிர்கொள்ளும் அவதூறான, அவமரியாதையான சூழலை இவை எடுத்துக் காட்டுகின்றன.



சில ஆண்டுகளுக்கு முன்னால் கருந்துளையின் முதல் ஒளிப்படத்தைப் பற்றிய ஒரு செய்தி வந்தது நினைவிருக்கலாம். இந்த நிகழ்வின்போது புகழ்பெற்றவர் கேட்டி பௌமன். கருந்துளை ஒளிப்படத்துக்கான அல்காரிதத்தை உருவாக்குவதில் இவர் முக்கியப் பங்காற்றியிருந்தார். முனைவர் பட்டம் பெற்றவரான இவர், கருந்துளை ஒளிப்படம் கிடைத்த பிறகு தன்னுடைய வியப்பைக் காட்டும்படி அந்தத் தருணத்தை ஒளிப்படமாகப் பகிர்ந்திருந்தார். அந்த நொடியிலிருந்து சீறிப் பாயந்தது சமூக ஊடகப் புயல். 'இது பல பேரின் கூட்டு முயற்சி' என்று கேட்டி தொடர்ந்து சொல்லியிருந்தாலும், அவர் மட்டுமே இதைச் சாதித்தது போன்ற ஒரு கோணத்தில் தாமாகவே ஊடகங்கள் செய்திகளை எழுதிக்கொண்டன. இந்த அரைகுறைத் தகவலை இன்னும் அரைகுறையாகப் புரிந்துகொண்ட சமூக வலைதளவாசிகள், 'ஆண்ட்ரூ சேல் என்பவர்தான் இந்த அல்காரிதத்தை எழுதினார். இந்தச் சின்ன பெண் அவருடைய சாதனைகளைத் தன்னுடையதுபோல காட்டிக்கொள்கிறார்' என்று எழுதத் தொடங்கினார்கள். முனைவர் பட்டம் பெற்றவரான கேட்டியைச் சாதாரண ஓர் உதவியாளராகச் சித்தரித்தனர். 'ஒரு ஆண் எல்லா வேலைகளையும் செய்து இந்தச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். ஆனால் அதை மறைத்து, ஒரு பெண் என்பதாலேயே கேட்டியைப் புகழ்கிறார்கள்' என்றனர்.

கேட்டி

ஒருகட்டத்தில், அவரின் பெயரை கூகுளில் தேடினாலே, 'கேட்டி சொன்ன பொய்' என்பது போன்ற கட்டுரைகள் முதலாவதாக வரும் அளவுக்கு இது மோசமானது. அவர் பெயரில் போலிக்கணக்குகள் உருவாக்கப்பட்டன. அவர் சொன்ன 'பொய்' எவ்வளவு மோசமானது என்பதை விளக்கும் பல வீடியோக்கள் யூடியூபில் பதிவேற்றப்பட்டன. இதில் சம்பந்தப்பட்டிருந்த ஆண்ட்ரூ செல், 'இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வின் மையமாக ஒரு பெண் இருக்கிறார் என்பது பலருக்குப் பிடிக்கவில்லை, அதனால் இப்படிச் செய்திருக்கிறார்கள். இது பலரது கூட்டு முயற்சி, இதைக் கேட்டியும் சொல்லியிருக்கிறார். ஆகவே என் சக விஞ்ஞானி மீது இப்படிப்பட்ட அவதூறுகள் வருவதை நான் ஏற்கவில்லை' என்று பேட்டி கொடுக்க வேண்டியிருந்தது. அதன் பிறகு சத்தம் ஓய்ந்தது. ஆனால், இவையெல்லாம் கேட்டிக்கு எப்படிப்பட்ட மன அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஒருவரின் செயற்பாடு பிடிக்கவில்லை என்றாலோ கருத்துகளுடன் முரண்பட்டாலோ எதிர்கருத்து வைக்காமல் அவரின் பின்னணி, தகுதி எல்லாவற்றையும் கேள்விக்குட்படுத்தி, அவரின் பொது பிம்பத்தையே தீக்கிரையாக்குவதுதானே சமூக ஊடகங்களின் நிதர்சனம்? 2020ஆம் ஆண்டில் கூகுள் நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அற வல்லுநர் டிம்னிட் கெப்ருவுக்கும் அதுதான் நிகழ்ந்தது. கூகுளின் மொழிசார் மாதிரிகளில் இருக்கும் அறச்சிக்கல்கள் பற்றி இவர் ஒரு விரிவான ஆய்வுக்கட்டுரை எழுதினார். இதைப் படித்த கூகுள்

(7ஆம் பக்கம் பார்க்க...)



# காசா மருத்துவமனை மீது இஸ்ரேல் தாக்குதல்: 4 பத்திரிகையாளர் உட்பட 19 பேர் உயிரிழப்பு

காசாவின் பிரதான மருத்துவமனையின் நான்காவது தளத்தில் நேற்று இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 19 பேர் பலியானார்கள். தெற்கு காசாவில் கான் யூனிசில் உள்ள மருத்துவமனை காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையாகும்.

இந்த மருத்துவமனை மீது இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளது. முதலில் ஏவுகணை மூலமாக தாக்குதல் நடத்தியுள்ளது. கட்டிடத்தின் நான்காவது தளத்தில் நடந்த தாக்குதலை அடுத்து அங்கு மீட்பு குழுவினர் விரைந்துள்ளனர்.

அப்போது மற்றொரு முறை தாக்குதல் நடத்தப்பட்டதாக சுகாதார துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் 4 பத்திரிகையாளர்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர்.

மேலும் பலர் காயமடைந்தனர். இவர்களில் காசா போர் தொடங்கியதில் இருந்து அசோசியேட்டட் பிரஸ் மற்றும் பிற செய்தி நிறுவனங்களுக்காக ப்ரிலான்சராக பணிபுரிந்த மரியம் டாக்காவும் ஒருவர். அல் ஜசீராவை சேர்ந்த பத்திரிகையாளர் முகமது சலாம் மற்றும் ராய்ட்டர்சின் ஒப்பந்த கேமராமேன் ஹூசாம் அல் மஸ்ரியும் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். 22 மாத போரில் குறைந்தது 192 பத்திரிகையாளர்கள் பலியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 22 மாதமாக நடந்து வரும் போரின் இந்த மருத்துவமனை ஏராளமான தாக்குதல்கள் மற்றும் குண்டு வீச்சுகளையும் தாங்கி நிற்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் தொடர் தாக்குதல் காரணமாக மருத்துவமனையில் பொருட்கள் மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவித்துள்ளனர். மருத்துவமனை மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் அசாதாரணமானது அல்ல. காசா பகுதி முழுவதும் ஏராளமான மருத்துவமனைகள் இஸ்ரேலால் தாக்கப்பட்டுள்ளன. (ஐ)



## வியட்நாமை சுழன்றடித்த கஜிகி: 7000 வீடுகள் சேதம், விமான நிலையங்கள் மூடல்

வியட்நாமை தாக்கிய கஜிகி சூறாவளிக்கு 3 பேர் பலியாகி இருக்கின்றனர். அங்குள்ள விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சீனாவின் தெற்கே வெப்ப மண்டல புயல் கஜிகி, வியட்நாமை நோக்கி நகர்ந்து தற்போது தாக்கி உள்ளது. சூறாவளியாக மாறி காற்றுடன் கடும் மழையும் பெய்ய, நிலச்சரிவும் ஏற்பட்டது. இதில் 3 பேர் சிக்கி பலியாகி உள்ளனர். ஏராளமானோர் மாயமாகி இருக்கின்றனர்.

7000 வீடுகள், 28, 800 ஹெக்டேர் விளைநிலங்கள் நீரில் மூழ்கி உள்ளன. 18,000 மரங்கள் சாய்ந்துள்ளன. தன்ஹோா பகுதியில் மட்டும் 331 மின்கம்பங்கள் சரிந்துள்ளன. தன்ஹோா, தாய் நுயுன் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் மின்சாரம் வினியோகம் இல்லை.

மணிக்கு 130 கிமீ வேகத்தில் சுழன்றடித்த கஜிகி சூறாவளி ஹனோய் உள்ளிட்ட பல நகரங்களை கடுமையாக தாக்கியது. கிட்டத்தட்ட 44,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். 16,000 ராணுவ வீரர்கள் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளில் இறங்கி இருக்கின்றனர்.

இரண்டு உள்நாட்டு விமான நிலையங்கள் மூடப்பட்டு உள்ளன. 35 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டு உள்ளது. வியட்நாமில் இருந்து சர்வதேச நாடுகளுக்குச் செல்லும் விமான சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளது.

இதுகுறித்து அந்நாட்டு தேசிய காலநிலை மையம் கூறி உள்ளதாவது

வடக்கு வியட்நாமின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. சில பகுதிகளில் 150 மிமீ அளவுக்கு மழை பதிவாகக்கூடும். பல பகுதிகளில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளது. நிலைமை மிகவும் பாதுகாப்பற்ற, அபாயகரமான சூழலில் இருக்கிறது. வாகனங்களை யாரும் இயக்க வேண்டாம். மீன்பிடிக்கவோ, சுற்றுலா பகுதிகளை ரசிக்கவோ உகந்த சூழல் தற்போது இல்லை. இவ்வாறு வியட்நாம் காலநிலை மையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஜெலன்ஸ்கியை புடின் சந்திக்க மாட்டார்: போர் நிறுத்தத்திற்கு முயற்சித்த டிரம்ப் வெளிப்படை!



“உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை ரஷ்ய அதிபர் புடின் சந்திக்க மாட்டார். ஏனெனில் அவருக்கு அவரை பிடிக்கவில்லை” என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்தார். உக்ரைன்- ரஷ்யா இடையே நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் முயற்சி செய்து வருகிறார். அவர் ரஷ்ய அதிபர் புடினிடம் போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் உக்ரைன் அதிபர் வெள்ளை மாளிகையில் டிரம்பை சந்தித்து பேசினார். இதில் போர் நிறுத்தம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், புடின் ஏன் ஜெலன்ஸ்கியை சந்திக்க இவ்வளவு தயங்குகிறார்? என்று டிரம்ப் இடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு டிரம்ப் அளித்த பதில்: உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை ரஷ்ய அதிபர் புடின் சந்திக்க மாட்டோர். ஏனெனில் அவருக்கு அவரை பிடிக்கவில்லை. இரண்டு போர்க்கால தலைவர்களும் நேருக்கு நேர் சந்திப்பார்களா என்று எனக்கு தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் சந்திக்கலாம். ரஷ்ய அதிபர் புடின்- உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை சந்திக்காவிட்டால் விளைவுகள் ஏற்படும். அடுத்த ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களில் என்ன நடக்கிறது என்பதை பார்த்துவிட்டு அதில் தலையிடுவேன். நான் எப்போதும் சொல்வேன். நான் ஒரு சந்திப்பை நடத்தி ஒப்பந்தத்தை முடிப்பதற்கு முன்பு அவர்கள் சந்திக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இவ்வாறு அதிபர் டிரம்ப் பேசினார். (ஐ)

## குளவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லக்சபான தோட்ட – வாழமலை பிரிவில் இன்று மதியம் தேயிலை கொழுந்து கொய்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்களே குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

## அநுர கோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சியினர் மற்றும் ரணிலின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“அடக்குமுறைக்கு எதிராக” என்ற பெயரில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “அநுர கோ ஹோம்” என்று விண்ணதிரக் கூச்சலிட்டனர்.

இதனால் கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

இந்தப் போராட்டத்தால் கொழும்பு கோட்டை முதல் லேக் ஹவுஸ் நிறுவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் கொம்பனி வீதி உள்ளிட்ட பல வீதிகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

## போராட்டக்காரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணிலின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மூக்கில் படுகாயமடைந்தார்.

அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர், இரத்தம் சொட்டச் சொட்ட அங்கிருந்து வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## அநுர அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடந்து வருகின்றன. இந்த அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள், பயமுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. எந்தவொரு சவாலையும் எதிர்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், ஜனநாயகத்தை இல்லாதொழிக்க எடுக்கும் சகல முயற்சிகளையும் முறியடிக்க மக்களுடன் ஒன்றிணைந்து வலுவான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றுத் தருவோம்.

குடிமக்களாக நமக்கு ஜனநாயக உரிமைகள், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் என்பன காணப்படுகின்றன.

இந்த அச்சுறுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து உறுதியாக நின்று, நாட்டுக்காக நல்லதொரு நோக்கத்துக்காக அனைவரும் அணிதிரளுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நோக்கத்துக்காகப் பெற்றுத் தர முடியுமான உட்சபட்ச பாதுகாப்பையும் பக்க பலத்தையும் நாம் பெற்றுத் தருவோம்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும்.

அவ்வாறே, அடக்குமுறை, அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் நாம் அணிதிரள்வோம். இதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவோம்.

சட்டத்தை மதித்து, நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டைப் பாதுகாத்து, நீதிமன்ற சுதந்திரத்துக்காக வேண்டி நாம் முன்னிற்போம்.

அடக்குமுறை, அச்சுறுத்தல்கள் மூலம் அரசு தனது எதிரிகளை வேட்டையாடும் முயற்சிக்கு நாம் இடமளியோம். நாட்டு மக்களே அரசுகள் வருவதையும் போவதையும் தீர்மானிப்பவர்கள். இன்று வேலையில்லாப் போக்கு அதிகரித்துள்ளது.

பணவீக்கமும் அதிகரித்துள்ளது. மக்கள் படும் துயரங்களுக்கு மத்தியில் நாம் எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசு குறித்து திருப்திப்பட முடியாது.” - என்றார்.

## விளையாட்டுச் சங்கங்களின் பதிவு தற்காலிகமாக நிறுத்தம்- வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பு!

தேசிய தடகள, மேசைப்பந்து மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கங்களின் பதிவு தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு நேற்று (25) முதல் அமலுக்கு வந்துள்ளதாக தொடர்புடைய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் குறித்த மூன்று சங்கங்களின் நிர்வாக மற்றும் மேற்பார்வை செயல்பாடுகள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

1973ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 32 மற்றும் 33ஆம் பிரிவுகளின்படி இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான வழக்கு- சூம்’ தொழிநுட்பம் ஊடாக வழக்கில் இணைந்த ரணில்!

*முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அவர் ‘சூம்’ தொழிநுட்பம் ஊடாக வழக்கில் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*குறித்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

*இதன்போது ரணில் விக்ரமசிங்க நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் ணழழஅ தொழினுட்பத்தினூடாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.*

*குற்றப் புலனாய்வுத் துறையிலிருந்து மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் முன்னிலையானார்.*

*சந்தேகநபர் ரணில் விக்ரமசிங்கவின் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன மற்றும் அனுஜா பிரேமரத்ன உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## சுண்டிக்குளத்தில் படகு மோதி இளைஞர் ஒருவர் பரிதாபப் பலி

சுண்டிக்குளம், ஓக. 26

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் பகுதியில் படகு விபத்தில் இளைஞர் ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சிக் கிழக்கு, சுண்டிக்குளம் பகுதியில் உடப்பு பகுதியைச் சேர்ந்த மைனர் சம்மாட்டியின் கரைவலை வாடியில் இன்று அதிகாலை கரவலை மீன்பிடி நடவடிக்கை இடம்பெற்றது.

அண்மைய நாட்களாக நாட்டின் சில பகுதிகளில் காணப்படும் அசாதாரண காலநிலை சுண்டிக்குளம் கடல் பகுதியிலும் நிலவியது.

இதன்போது மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் கடலின் அலையில் இருந்து படகை விடுவிப்பதற்கு முயன்ற போது அதே படகு அலையில் சிக்குண்டு அந்த இளைஞர் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் உடப்பு பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய சின்னத்தம்பி சசிதரன் என்று தெரியவந்துள்ளது.

சடலம் நித்தியவெட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## டயானா கமகேவுக்குவுக்குப் பிடியாணை

கொழும்பு, ஓக.26

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே விசாரணைக்கு ஆஜராகத் தவறியதால், அவரைக் கைது செய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு இன்று கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க முன்னிலையில் அழைக்கப்பட்டது.

அப்போது பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால் பிடியாணைப் பிறப்பிக்கப்பட்டது.

பிரதிவாதி டயானா கமகேவின் பிணையாளர்களுக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## யாழில் திறக்கப்படவுள்ள கடவுச்சீட்டு விநியோகத்திற்கான அலுவலகம்!

யாழ். நாவாட்ட செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடவுச்சீட்டு விநியோகத்திற்கான அலுவலகம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 01 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு விநியோகத்திற்கான அலுவலக பணிகள் 70 மில்லியன் ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் 01ஆம் திகதியின் பின்னர் வடக்கு மாகாணத்திலுள்ள மக்கள் தமக்கான கடவுச் சீட்டுக்களை யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் புதிய அலுவலகத்தினுடாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஒருநாள் மற்றும் சாதாரண சேவைகளுடாக புதிய அலுவலகத்தில் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வானை அளப்போம்...

நிர்வாகம் இந்தக் கட்டுரையைத் திரும்பப் பெறுமாறு வலியுறுத்தியது. ’கட்டுரையை மறு ஆய்வுக்கு உட்படுத்திய குழுவினரின் பெயர்களைச் சொல்லுங்கள்’ என்று டிம்னிட் கேட்க, தகவல் தர மறுத்துவிட்டு, ’அவரின் ராஜினாமா கடிதத்தை ஏற்கிறோம்’ என்று பொய்யாக வெளியில் சொல்லிவிட்டு அவரைப் பணிநீக்கம் செய்தது கூகுள்.

டிம்னிட்

இது ஒரு பணியாளருக்கும் நிறுவனத்துக்கும் இடையிலான பிரச்சினையாக அங்கேயே முடிந்திருக்க வேண்டும். ஆனால், சமூக ஊடகங்கள் குறுக்கே வந்து ஆக்கிரமித்துக் கொண்டன. கூகுளின் சில அதிகாரிகள், ’அவரின் ஆயுக்கட்டுரை அறிவியல்பூர்வமானது அல்ல’, ’இதில் போதுமான ஆய்வு மேகொள்ளப்படவில்லை’, ’பிரசாரத்தை அறிவியல்போல எழுதியிருக்கிறார்’ என்றெல்லாம் சமூக வலைதளங்களில் எழுதி ட்ரோல்களை முடுக்கிவிட்டார்கள். ’பாதிக்கப்பட்டவர் போலத் தன்னைக் காட்டிக்கொள்கிறார்’, ’சுமாரான ஆய்வுக்கட்டுரை’ என்பதுபோல மெதுவாகத் தொடங்கிய உரையாடல், ’ஆபிரிக்காவுக்குத் திரும்பிப் போ’ என்பதில் வந்து நின்றது. கறுப்பினத்தவரான டிம்னிட்டை நேரடியான இனவெறி வார்த்தைகளால் தாக்கத் தொடங்கினார்கள், அடுத்த கட்டமாக மோசமான சொற்கள் வரத் தொடங்கின. வேறு எந்தப் பதிவுமே இல்லாமல் டிம்னிட்டைத் தாக்கும் பதிவுகளை மட்டுமே கொண்ட பல புதிய சமூக வலைதளக் கணக்குகள் முளைத்தன. மிக மோசமான சமூக வலைதளத் தாக்குதலை டிம்னிட் எதிர்கொண்டார். இன்னொருபுறம் கூகுளின் பிற பணியாளர்கள் டிம்னிட்டுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் குதித்ததோடு, இந்நிறுவனத்துக்குள் இருக்கும் பாரபட்சத்தையும் வெளிப்படையாகப் பேச ஆரம்பித்தார்கள். சுந்தர் பிச்சை நேரடியாகத் தலையிட்டு, பொது மன்னிப்பு கேட்க வேண்டியிருந்தது. ஆனால், இது நடப்பதற்குள் டிம்னிட்டைச் சமூக வலைதளம் குற்றவாளிக் கூண்டிலேற்றி மோசமான வசைகளைத் தண்டனையாகக் கொடுத்திருந்தது.

இணையதளங்களில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகமான ட்ரோல்களை எதிர்கொள்கிறார்கள் என்பதைப் பல ஆய்வுக் கட்டுரைகள் உறுதிப்படுத்தி இருக்கின்றன. ஸ்டெம் துறைகளில் உள்ள பெண்களைப் பற்றிப் பேசும்போது அவர்களின் புறத்தோற்றத்துக்கு ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் தருகின்றன என்று மெவினா சிம்பாவும் ஜென்னி கிஸ்ஸிங்கரும் 2009இல் வந்த ஓர் ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்தார்கள். சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவிக்கும்போதோ பிரச்சினைகளில் சிக்கும்போதோ ஆண்களும் மோசமான ட்ரோலை எதிர்கொள்கிறார்கள், ஆனால் அவர்களுக்கு வரும் விமர்சனங்கள் பாலின வெறுப்பு நிறைந்தவையாகவும் அவர்களின் புறத்தோற்றத்தின் மீதான மிக மோசமான வசைகளாகவும் இருப்பதில்லை, இது பெண்களுக்கே அதிகம் நடக்கிறது. இதைப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பல பெண் விஞ்ஞானிகளிடம், ’உங்களுக்குப் பிடித்த லிப்ஸ்டிக் நிறம் என்ன?’, ’உங்களுக்குச் சமையல் செய்யப் பிடிக்குமா?’ என்று கேட்கப்படுகிறது. ஒரு பெண் விஞ்ஞானியின் கருத்துகளோடு முரண் ஏற்படும்போதெல்லாம் பெண் வெறுப்பு ஊடாடும் வசைகள் முன்வைக்கப்படுகின்றன. ஸ்டெம் துறைகளுக்குள்ளே சந்திக்கும் பாரபட்சத்தோடு மட்டுமல்லாமல், பொதுவெளியிலிருந்து வரும் இப்படிப்பட்ட அவதூறுகளையும் பெண்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது.

ஆராய்ச்சிக் கூடத்துக்கும் பொதுமக்களை நேரடியாக எதிர்கொள்வதற்கும் நடுவில் இன்னொரு களம் இருக்கிறது. அது என்ன களம்? அந்தக் களத்தில் ஸ்டெம் பெண்கள் என்னவாகப் பார்க்கப்படுகிறார்கள்?


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk